MLWA HSS Madurai - 625001 (Run by Jain Educational and Empowerment Trust)

3 Mark Problem Only L 7 - L 9

Date : 16-Jan-19

12th Standard

**கணக்குப்பதிவியல்**

Reg.No. : | | | | | | |

**Prepared by M.MuthuSelvam Cell No : 9842104826**

Time : 02:00:00 Hrs

Total Marks : 111

**Answer All**

37 x 3 = 111

1) திவ்யா டெக்ஸ்டைல்ஸ் லிமிடெட் ஒன்று ரூ.10 முகமதிப்புடைய 500 சாதாரணப் பங்குகளின் முதல் அழைப்புப் பணம் ரூ.2 வீதம் மற்றும் இறுதி அழைப்பு ரூ.3 வீதம் செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்தனர்.இதில் 300 பங்குகளை பங்கொன்று ரூ.6 வீதம் முழுவதும் செலுத்தப் பட்டவைகளாக காவ்யாவிற்கு மறு வெளியீடு செய்தனர். தேவையானக் குறிப்பேட்டுப் பதிவுகள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளையும் தயாரிக்க.

2) இராமன் ,இலட்சுமணன் என்ற கூட்டாளிகள் முறையே 4:3 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர் வேலன் என்பவரைச் சேர்க்க முடிவு செய்த பிறகு ,பின்வருமாறு சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களை மறுமதிப்பீடு செய்தனர்.
(அ)கட்டட மதிப்பை ரூ.60,000 அதிகப்படுத்த வேண்டும்.
(ஆ)ஐயக்கடன் ஒதுக்கு ரூ.800 குறைக்க வேண்டும்.
(இ)இயந்திர மதிப்பை ரூ.16,000, அறைகலன் ரூ.4,000 மற்றும் சரக்கிருப்பு ரூ.12,000 குறைக்க வேண்டும் .
(ஈ)கொடுபடாமலுள்ள பொறுப்புகளுக்கு ரூ.800க்கு வகை செய்ய வேண்டும் மறுமதிப்பீட்டுக் கணக்கைத் தவிர்க்கவும்.

3) ஆனந்தன் ,பாஸ்கரன் என்ற கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர் .அவர்கள் சந்திரன் என்பவரை 1/3 கூட்டுக்கு இருவரும் சமமாக தியாகம் செய்து சேர்த்தனர். புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடுக.

4) ஒரு நிறுமம் பங்குகொன்றுக்கு ரூ.20 விதம் 10,000 பங்குகளை ரூ.5 முனைமைத்துடன் வெளியிட்டது.தொகை கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ | 10 |
| ஒதுக்கீட்டின் போது (முனைமைத்துடன் ) | ரூ | 10 |
| முதலாவது மற்றும் இறுதி அழைப்பின்போது | ரூ | 5 |

11,000 பங்குகளுக்கான விண்ணப்பத்தின் நிராகரிக்கப்பட்டன.மிகுதியான விண்ணப்பங்களுக்காக தொகை திருப்பப்பட்டது.500 பங்குகளுக்கான இறுதி அழைப்புத் தொகையை தவிர மற்ற அனைத்துத் தொகையும் பெறப்பட்டது. குறிப்பேட்டும் பதிவுகள் தருக .

5) குன்றன், குமரன் என்ற கூட்டாளிகள் முறையே 9 :7 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர்.
குகன் என்பவரை 3/16 கூட்டுக்கு முழுவதும் குன்றன் தியாகம் செய்து சேர்த்தனர் .புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடுக.

6) ஷீலா, நீலா என்ற கூட்டாளிகள் முறையே 4:3 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர்.கமலா என்பவரை 1/5 கூட்டுக்குச் சேர்த்தனர் .அவர்களுடைய புதிய இலாபப் பகிர்வு விகிதத்தையும் தியாக விகிதத்தையும் கணக்கிடுக.

7) புதிய கூட்டாளி சேர்க்கையில் கூட்டாண்மையின் சொத்துகளையும் பொறுப்புகளையும் மறு மதிப்பீடு செய்வதன் பதிவுகள் யாவை ?

8) கோகிலா, மாலா என்ற கூட்டாளிகள் முறையே 4:3 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர்.சந்திரா என்பவரை 3/7 கூட்டுக்குச் சேர்த்தனர்.இப்பங்குக்கு கோகிலா செய்யும் தியாகம் 2/7 மற்றும் மாலா செய்யும் தியாகம் 1/7.புதிய இலாபப் பகிர்வு விகிதம் மற்றும் தியாக விகிதம் கணக்கிடுக.

9) ஒரு நிறுமம் ரூ. 10 விதம் 20,000 பங்குகளை வெளியிட்டது. தொகை கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.
விண்ணப்பத்தின் போது ரூ. 3
ஒதுக்கீட்டின் போது ரூ. 3
முதல் மற்றும் இறுதி
அழைப்பின் போது ரூ. 4 அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டு முறையாக செலுத்தப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

10) ப்ரீத்தி நிறுமம் ரூ.10 விதம் 5,000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்றது. கிழ்க்கண்டவாறு தொகை செலுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ. | 3 |
| ஒதுக்கீட்டின் போது | ரூ. | 2 |
| முதலாவது அழைப்பின் போது | ரூ. | 2 |
| இறுதி அழைப்பின் போது | ரூ. | 3 |

ஆனது பங்குகளும் ஒப்பப்பட்டு முறையாக செலுத்தப்பட்டது உரிய குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

11) பெயரளவு முதல் ரூ.5,00,000 பெற்றுள்ள ஒரு கூட்டு பங்கு நிறுமம், அதனை ரூ.100 விதம் 5,000 பங்குகளாக பிரித்து வெளிப்பட்டது. தொகை கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பத்தின் பொது | ரூ. | 30 |
| ஒதுக்கீட்டின் போது | ரூ. | 20 |
| முதலாவது அழைப்பின் போது | ரூ. | 20 |
| இறுதி அழைப்பின் பொது | ரூ. | 20 |

அணைத்து பங்குகளும் ஒப்பப்பட்டு முறையாக செலுத்தப்பட்டது.
உரிய குறிபேட்டுப் பதிவுகள் தருக.

12) மணி,சுந்தரம் என்ற ஒரு நிறுவனத்தின் கூட்டாளிகள் முறையே 7:3 எனும் விகிதத்தில் இலாப நட்டங்களை பகிர்ந்து வந்தனர் .முத்தையன் புதிய கூட்டாளியாகச் சேர்க்கப்பட்டார் .மணி அவருடைய பங்கில் 1/7 பங்கும்,சுந்தரம் அவருடைய பங்கில் 1/3 பங்கும் தியாகம் செய்கின்றனர்.புதிய இலாப விகிதத்தையும் ,தியாக விகிதத்தையும் கணக்கிடுக.

13) அசோக் வரையறு நிறுமத்தின் 300 பங்குகளை பங்கொன்று ரூ. 10 வீதம் (முழுவதும் அழைக்கப்பட்டவை) வைத்திருந்த ராம் என்பவர் ஒதுக்கீட்டுத் தொகையான பங்கொன்றின் மீது ரூ. 3 மற்றும் இறுதி அழைப்புத் தொகையாக பங்கொன்றிக்கு ரூ. 4 செலுத்தத் தவறவே பங்குகள் ஒறுப்பிழப்பு செய்யப்பட்டன . இப்பங்குகளில் 250 ஷ்யாம் என்பவருக்கு ரூ. 2000 த்திற்கு, மறுவெளியீடு செய்யப்பட்டது . பங்கு ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டுக்கான பதிவுகளைத் தருக .

14) குட்லக் வரையறு நிறுமம் பங்கொன்று ரூ. 10 வீதம் 1,00,000 பங்குகளை கீழ்க்கண்டவாறு செலுத்தும் வண்ணம் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ரூ. 3
ஒதுக்கீட்டின் போது ரூ. 3

மற்றும் மீத தொகையினை தேவையானபோது 1,50,000 பங்குகளுக்கு விண்ணப்பம் பெறப்பட்டது. இயக்குநர்கள் மிகையான பங்கு விண்ணப்பங்களை நிராகரித்து விண்ணப்பத் தொகை திரும்பச் செலுத்தப்பட்டது. பெற வேண்டிய அனைத்து தொகையும் பெறப்பட்டது. இந்நடவடிக்கைகளை ஏடுகளில் பதிவு செய்க.

15) பிரீத்தி லிமிடெட் ரூ.100 வீதம் 25,000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் வரவேற்றது.கீழ்கண்டவாறு தொகை செலுத்தப்பட வேண்டும்.
விண்ணப்பத்தின் போது ரூ.30
ஒதுக்கீட்டின் போது ரூ.40
முதல் மற்றும் இறுதி அழைப்பு ரூ.30
பொதுமக்களிடமிருந்து 30,000 பங்குகள் பெறப்பட்டன.அதிகமாக பெட்ரா பங்குகள் மீதான விண்ணப்பங்கள் இயக்குநர்களால் நிராகரிக்கப்பட்டன.அனைத்துத் தொகையும் முறையாகப் பெறப்பட்டது.பேரேட்டுக் கணக்குகளை தயாரிக்க.

16) சந்தோஷ் வரையறு நிறுமம் பங்கொன்று ரூ.100 விதம் 5,000 நேர்மைப் பங்குகளை பொதுமக்களுக்கு வெளியிட்டது.தொகை கீழ்வருமாறு செலுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ | 30 |
| ஒதுக்கீட்டின் போது | ரூ | 30 |
| முதலாவது அழைப்பின் போது | ரூ | 40 |

பொது மக்களால் ஒப்பப்பட்ட 4,000 பங்குகள் ஒதுக்கீடு செய்யப்பட்டன.200 பங்குகள் மீதான அழைப்புத் தொகை தவிர ஏனைய தொகைகள் அனைத்தும் பெறப்பட்டது. குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

17) அருண் லிமிடெட் ரூ.10 வீதம் 20,000 பங்குகளை 10% தள்ளுபடியில் வெளியிட்டது.
விண்ணப்பத்தின் போது ரூ.2.50
ஒதுக்கீட்டின் போது ரூ.3.00
முதல் மற்றும் இறுதி அழைப்பின் போது ரூ.3.50
200 பங்குகள் மீதான இறுதி அழைப்பு தவிர ஏனைய தொகைகள் அனைத்தும் பெறப்பட்டன.இப்பங்குகளை உரிய அறிவிப்பு கொடுத்து நிறுமம் ஒறுப்பிழப்பு செய்தது. ஒறுப்பிழப்புக்கான.பதிவினைச் செய்க.

18) ஸ்ரீதேவி, சிந்தியா என்ற கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாப நட்டம் பகிர்ந்து வந்தனர் .அவர்கள் பாத்திமா என்பவரை கூட்டாண்மையில் சேர்க்க முடிவு செய்து கீழ்க்காணும் சொத்துக்கள் ,பொறுப்புக்கள் மறு மதிப்பீடு செய்தனர்.
(அ)ஏடுகளில் பதிவு பெறாமலுள்ள முதலீடுகள் ரூ 18,000 தற்பொழுது பதிவு செய்தல் வேண்டும் .
(ஆ)சரக்கிருப்பு , அறைகலன் மற்றும் எந்திரத்தின் மதிப்புகளை முறையே ரூ .18,000 ரூ .6,000, ரூ.30,000 என குறைக்க வேண்டும்.
(இ)தொழிலாளர்களுக்கு ஈட்டுத்தொகை ரூ .24,000க்கு ஒதுக்கு உருவாக்க வேண்டும் .
குறிப்பேட்டுப் பதிவுகள் தந்து ,மறுமதீப்பீட்டுக் கணக்கைத் தயாரிக்கவும்.

19) ஒரு நிறுமம் ரூ.10 விதம் 10,000 பங்குகளை ரூ.1 தள்ளுபடியில் வெளியிட்டது.தொகை கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ | 3 |
| ஒதுக்கீட்டின் போது (தள்ளுபடியுடன் ) | ரூ | 4 |
| முதலாவது அழைப்பின் போது | ரூ | 2 |

அணைத்து பங்குகளும் ஒப்பப்பட்டு முறையாக செலுத்தப்பட்டது.
உரிய குறிபேட்டுப் பதிவுகள் தருக

20) கனி வரையறு நிறுமம், ஒதுக்கீட்டுப் பணம் பங்கொன்றுக்கு ரூ. 3 மற்றும் இறுதி அழைப்புப் பணம் பங்கொன்றுக்கு ரூ. 4 பெறப்படாமைக்கான திருமதி. சாந்தா அவர்களின் 20 பங்குகளை (பங்கொன்று ரூ. 10 முற்றும் அழைக்கப்பட்டது) ஒறுப்பிழப்பு செய்தது. அவர் விண்ணப்ப தொகையான பங்கொன்றிற்கு ரூ. 3 செலுத்தி இருந்தார். ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் பங்கொன்று ரூ. 8 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட பங்குகளாக ஜோஸ்பினுக்கு மறுவெளியீடு செய்யப்பட்டது. ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டுக்கான பதிவுகளைத் தருக.

21) முனைமத்தில் வெளியிட்ட பங்குகளை ஒறுப்பிழப்பு செய்வதற்கான குறிப்பேட்டுப் பதிவு தருக.

22) கலாவதி,மாலதி என்ற கூட்டாளிகள் முறையே 4:3 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து வந்தனர்.லீலாவதி என்பவரை 1/3 கூட்டுக்குச் சேர்த்துக் கொண்டனர்.நற்பெயர் மூன்று ஆண்டுகளின் சராசரி இலாபத்தில் இரண்டு ஆண்டு கொள்முதல் எனக்கொண்டு மதிப்பிடப்பட்டது.மூன்று ஆண்டுகளின் இலாபங்கள் முறையே ரூ.44,000, ரூ.56,000,ரூ.68,000 ஆகும். கீழ்க்காணும் தருணங்களில் குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக. (அ)நற்பெயர் இதுவரை ஏடுகளில் இல்லாமலிருந்தால் (ஆ)ஏடுகளில் நற்பெயரின் மதிப்பு ரூ.28,000 எனக் காட்டப்பட்டிருந்தால் . (இ)ஏடுகளில் நற்பெயரின் மதிப்பு ரூ .1,68,000 எனக் காட்டப்பட்டிருந்தால்.

23) சுரேஷ் வரையறு நிறுமத்தின் அங்கீகரிக்கப்பட்ட முதல் ரூ.20,00,000. பங்கு ஒன்றுக்கு ரூ.10 வீதம் 2,00,000 பங்குகளாகப் பிரிக்கப்பட்டு கூட்டுருவாக்கப்பட்டது.அதில் 1,90,000 பங்குகளை நிறுமம் பொது மக்களுக்கு வெளியிட்டது. ஆனால்,பொது மக்கள் அவற்றில் 1,80,000 பங்குகளை ஒப்பினர்.பங்கு ஒன்றுக்கு ரூ.6 வீதம் இயக்குநர்கள் செலுத்தக் கோரினர்.அவற்றில் 1000 பங்குகளுக்கான அழைப்புப் பணம் ரூ.2 தவிர அனைத்துப் பணமும் பெறப்பட்டது.பல்வகையான பங்கு முதலைக் கணக்கிடவும்.

24) குளோபல் வரையறு நிறுமம் ரூ. 100 விதம் 6,000 பங்குகளை ரூ.20 முன்னமத்தின் வெளியிட்டது. தொகை கீழ்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும்.

| | | |
|---|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ | 30 |
| ஒதுக்கீட்டின் போது (முன்னமத்துடன்) | ரூ | 50 |
| முதலாவது அழைப்பின் போது | ரூ | 30 |
| இறுதி அழைப்பின் போது | ரூ | 10 |

அணைத்து பங்குகளும் ஒப்பப்பட்டு முறையாக செலுத்தப்பட்டது. உரிய குறிபேட்டுப் பதிவுகள் தருக.

25) காந்திமதி நிறுமத்தின் பெயரளவு முதல் ற்று.1,00,000 பங்குகொன்று ரூ.10 விதம் பதிவு செய்யப்பட்டது . இது பொதுமக்களுக்கு 6,000 பங்குகள் வெளியீடு செய்தது. ஆனால் 8,000 பங்குகள் வேண்டி விண்ணப்பங்கள் பெறப்பட்டன 1,000 பங்குகளுக்கான விண்ணப்பங்களை இயக்குனர்கள் நிராகரித்து திரும்பிவிட்டனர்.1,000 பங்குகள் மீதான விண்ணப்பத்தை தொகை ஒதுக்கீட்டிற்கு சரிக்ட்டப்பட்டது. பங்குகள் மீது பின்வருமாறு தொகைகள் பெறப்பட்டன. விண்ணப்பத்தின் போது பங்குக்கொன்றுக்கு ரூ. 3 விதம்; ஒதுக்கீட்டின் போது பங்குக்கொன்றுக்கு ரூ. 3 விதம்; மீதித் தொகை முதலாவது மற்றும் இறுதி அழைப்பில். 100 பங்குகளை வைத்திருந்த பங்குதாரர் ஒருவர் அளப்புத் தொகையை செலுத்தித் தவறியதன் காரணமாக அவரின் பங்குகள் ஒற்றுப்பிழைபு செய்யப்பட்டன, தேவையான குரிபேட்டுப் பதிவுகளைத் தருக.

26) ஒரு நிறுமம் 10% முனைமத்தில் வெளியிடப்பட்ட (பங்கொன்றின் மதிப்பு ரூ.100) 100 பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தது.இப்பங்குகள் மீது முதல் அழைப்புத் தொகை பங்கொன்றிற்கு ரூ.30 பெறப்படவில்லை.இறுதி அழைப்புத் தொகை ரூ.20 இன்னும் அழைக்கப்படவில்லை. இப்பங்குகளை ரூ.80 செலுத்தப்பட்டவைகளாக பங்கொன்று ரூ.70 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டது. பங்குகளின் ஒறுப்பிழப்பு மற்றும் மறுவெளியீட்டுக்கான பதிவுகளைத் தருக.

27) ஷீலா வரையறு நிறுமத்தின் இயக்குநர்கள் ஒன்று ரூ. 10 மதிப்புடைய 2000 பங்குகளை இறுதி அழைப்பு ரூ. 2.50 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்தனர். இதில் 1800 பங்குகளை பங்கொன்று ரூ. 6 வீதம் முழுவதும் செலுத்தப்பட்ட

பங்குகளாக மறு வெளியீடு செய்தனர். தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளைத் தருக.

28) கிரீன் நிறுமம் ரூ. 100 வீதம் 40,000 பங்குகளை ரூ. 10 தள்ளுபடியில் வெளியிட்டது. தொகை கீழ்க்கண்டவாறு செலுத்தப்பட வேண்டும். விண்ணப்பத்தின் பொழுது ரூ. 20
ஒதுக்கீட்டின் பொழுது (தள்ளுபடியுடன்) ரூ. 4
இறுதி அழைப்பின் போது ரூ. 25 பங்குகள் அனைத்தும் விண்ணப்பிக்கப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டன. உரிய நேரத்தில் அனைத்து தொகைகளும் பெறப்பட்டன. குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

29) கூட்டாளி ஒருவர் விலகும் பொழுது, கூட்டாண்மையின் சொத்துக்களையும் பொறுப்புகளையும் மறுமதிப்பீடு செய்வதன் பதிவுகள் யாவை ?

30) செண்பகம் வரையறு நிறுமம் ரூ.100 விகிதம் 20,000 பங்குகளை பின்வருமாறு செலுத்தும் வண்ணம் வெளியிட்டது.

| | | |
|---|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ | 25 |
| ஒதுக்கீட்டின் போது | ரூ | 25 |
| முதலாவது அழைப்பின் போது | ரூ | 20 |
| இறுதி அழைப்பின் போது | ரூ | 30 |

18,000 பங்குகளுக்கு விண்ணப்பங்கள் பெறப்பட்டு ஒதுக்கீடு செய்யப்பட்டன.200 பங்குகளுக்கான இறுதி அழைப்புத் தொகையும் பெறப்பட்டது குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

31) மேரி வரையறு நிறுமம் ரூ. 10 விதம் 1000 பங்குகளை ரூ. 2 முனைமத்தில் வெளியிட்டது. விண்ணப்பத்தின் போது ரூ. 4 ஒதுக்கீட்டின் போது ரூ. 4 (முனைமத்துடன்) தேவையுள்ள பொழுது மீதித் தொகை அழைக்கப்படும். அனைத்து பங்குகளும் ஒப்பப்பட்டு முறையாக செலுத்தப்பட்டது. உரிய குறிப்பேட்டுப் பதிவுகள் தருக.

32) ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் முற்றும் அழைக்கப் பெற்ற ரூ.10 மதிப்புடைய 100 பங்குகளை ஒறுப்பிழப்பு செய்தனர் . அவற்றின் மீது முதல் அழைப்பு பங்கொன்றுக்கு ரூ.2 வீதமும் , இறுதி அழைப்பு ரூ. 3 வீதமும் செலுத்தப்பட வில்லை . இதில் 60 பங்குகளை முழுவதும் செலுத்தப்பட்டவைகளாக பங்கொன்று ரூ. 6 வீதம் மறுவெளியீடு செய்தது. தேவையான குறிப்பேட்டுப் பதிவுகளை இந்நடவடிக்கைகளுக்குத் தருக.

33) M ,G என்ற கூட்டாளிகள் முறையே 3:2 எனும் விகிதத்தில் இலாபம் பகிர்ந்து கொள்கின்றனர். L என்ற புதிய கூட்டாளியைச் சேர்ப்பதை முன்னிட்டு ,அவர்கள் அந்நிறுவனத்தின் சொத்துக்களையும் ,பொறுப்புக்களையும் பின்வருமாறு மறுமதிப்பீடு செய்ய முடிவு செய்கின்றனர்.
(அ)ஏடுகளில் பதிவு பெறா முதலீடுகள் ரூ.12,000 ஐ இப்பொழுது பதிவு செய்ய வேண்டும்.
(ஆ)சரக்கிருப்பு மதிப்பை ரூ.3,000ம் ,அறைகலன் மதிப்பை ரூ.1,000ம் எந்திரத்தின் மதிப்பை ரூ.5,000ம் குறைக்க வேண்டும்.
(இ)கொடுபடாமலுள்ள பொறுப்புக்களுக்கு ரூ.4,000 ஒதுக்கு உருவாக்க வேண்டும்.குறிப்பேட்டுப்பதிவுகள் தந்து,மறுமதிப்பீட்டுக் கணக்கு காட்டிடுக.

34) வித்யா லிமிடெட் முதல் அழைப்புப் பணம் பங்கொன்றுக்கு ரூ.20 மற்றும் இறுதி அழைப்புப் பணம் பங்கொன்றுக்கு ரூ.30 பெறப்படாமைக்கான, ரோகிணி அவர்களின் 100 பங்குகளை (பங்கு ஒன்று ரூபாய் 100 முற்றும் அழைக்கப்பட்டது) ஒறுப்பிப்பு செய்தது. ஒறுப்பிழப்பு செய்த பங்குகள், கௌதமிக்கு மறுவெளியீடு செய்யப்பட்டது.தேவையான குறிப்பேட்டுப் பதிவுகள் மற்றும் பேரேட்டுக் கணக்குகளையும் தயாரிக்க.

35) ஒரு நிறுமத்தின் இயக்குநர்கள் ஒன்று ரூ. 10 மதிப்புடைய 200 சாதாரண பங்குகள் மீது இறுதி அழைப்புத் தொகையான ரூ. 2 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்பிழப்பு செய்தனர் . இப்பங்குகள் ரூ. 1500க்கு மறு வெளியீடு செய்யப்பட்டன . மேற்கண்ட நடவடிக்கைகளை பதிவு செய்க .

36) மாரி வரையறு நிறுமம் பங்கொன்று ரூ.100 விதம் 1000 பங்குகளை பொதுமக்களுக்கு ரூ.5 தள்ளுபடியில் பின்வருமாறு செலுத்தும் வண்ணம் வெளியிட்டது.

| | | |
|---|---|---|
| விண்ணப்பத்தின் போது | ரூ | 20 |
| ஒதுக்கீட்டின் போது | ரூ | 25 |
| முதலாவது அழைப்பின் போது | ரூ | 20 |
| இறுதி அழைப்பின் போது | ரூ | 30 |

அணைத்து பங்குகளுக்கும் விண்ணப்பம் பெறப்பட்டு ஒதுக்கீடு செய்த 100 பங்குகளுக்கான இறுதி அளப்புத் தொகை இயக்குனர்களுடன் செய்து கொண்ட ஏற்பாட்டின்படி முதலாவது அழைப்பின் போதே பெறப்பட்டது.குறிபேட்டுப் பதிவுகள் தருக

37) மீனாட்சி வரையறு நிறுமம் ஒன்று ரூ. 10 முகமதிப்புடைய 100 சாதாரணப் பங்குகளின் மீது ரூ. 6 மட்டும் அழைப்பு விடுத்திருந்த நிலையில் இறுதி அழைப்பான ரூ. 2 செலுத்தாத காரணத்தினால் ஒறுப்புழப்பு செய்தனர் . இந்த ஒறுப்பிழப்பு செய்த பங்குகள் பன்கொன்று ரூ.7 வீதம் முழுவதும் செலுத்தப்பட்டவைகளாக வெளியிடப்பட்டன. தேவை பதிவுகளை நிறுமத்தின் குறிப்பேட்டில் தருக.

**Work Hard ... Success is Yours**

*****************************************